## “என் உயிரினும் மேலான....”

# இளைஞர் அணி உருவாக்கியுள்ள 182 பேச்சாளர்கள் !

திறைக் கட்ட
மறுத்த கலிங்கனை
களம் அமைத்து வென்றான்
குலோத்துங்கன்
அவனைப்பற்றி பாடியதே கலிங்கத்துப் பரணி
எதிரிகளை வென்றது சரி ஆனால் எதிரிகளை வெல்லும் அளவிற்கு படைகள் பலம் பொருந்தி இருந்தது
குலோத்துங்கனிடம்
என்பது மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில்
இளைஞர் அணி உருவாக்கி இருக்கும் பேச்சாளர்கள் படை
வலிமையானவை,
எதிரிகளை வெல்லக் கூடியது,
உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிந்தனை
விரிவானது.

ஈரோடு
வெங்கடப்ப நாயக்கர் சத்திரத்தில் நடைபெற்ற கறுப்புச் சட்டை
பேச்சாளர்கள் பயிற்சியில்
ஈரோடு புலவர் ஆறுமுகனார் அவர்களும்
முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் கலந்து கொண்டு தந்தை பெரியார் அவர்களின்
வழிகாட்டுதல் படி
முதல் பிரச்சாரம்
அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் திருநாரையூர் பகுதியில் நடைபெற்றது என்று
ஈரோடு புலவர் ஆறுமுகனார் அடிக்கடி எங்களுக்கு சொல்வார்கள்.
அதேபோல
தலைவர் கலைஞர் அவர்கள்
ஈரோடு வரும் போது பலமுறை
புலவர் ஆறுமுகனாரையும்
ஈ.வெ.கி.செல்வராஜ் அவர்களையும் அழைத்து பேசுவார்கள்
ஒன்றாக பயணம் செய்த பேச்சாளர்கள் என்ற வகையில்.

உலகமெங்கும்
கிருத்துவ வழிபாட்டின் பலம் ,
இஸ்லாம் மார்க்கத்தின் பலம் ,
பௌத்தத்தின்
பலம் ,
இந்துக் கடவுள் வழிப்பாட்டு பலம் ,
அவர்களின் பிரச்சாரம் முக்கியமாக இருக்கிறது
என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் திராவிட இயக்கத்தின் பலம்
பிரச்சாரம் மட்டுமே.
தந்தை பெரியார்
பேறறிஞர் அண்ணா
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
தலைவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்
பிரச்சாரத்தின் வழியே
களம் அமைத்தார்கள்
களம் வென்றார்கள் .

தந்தை பெரியார்
மரணம் தொடும் வரை பேசினார்.
பேறறிஞர் அண்ணா
அய்யா கலைஞர்
இனமான பேராசிரியர்
ஆகியோரும் உயிர் இருக்கும் வரை
பிரச்சாரம் மட்டுமே
இனத்திற்கு
தமிழ் மொழிக்கு
சமூக நீதிக்கு
ஆதிக்க எதிர்ப்புக்கு
சரியான
ஜனநாயக போர் கருவி என்று நம்பினார்கள்.

அந்த வழியில்தான்
சேனாபதி
உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
பயணம் தொடர்கிறார்.

சமூக நீதியை
நிலை நிறுத்திய
புரட்சியாளர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்
தி.மு.க. இளைஞரணி
100 பேச்சாளரை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

வானம் திறந்தது
நட்சத்திரங்களின்
ஒளிகள் தெரிந்தது.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
தலைமையில்
மாநில – மாவட்ட இளைஞர் அணி உழைப்போடு
துணை முதலமைச்சர் அவர்களின்
உதவியாளர்
எங்கள் அருமை சகோதரர் செந்தில்
அவ்வப்போது செய்திகளோடு வழிகாட்ட

தி.மு.க.இளைஞரணி நடத்திய
கலைஞர் நூற்றாண்டு நிறைவு ஆண்டு

"என் உயிரினும் மேலான "
என்ற பொது தலைப்பில்
பேச்சுப் போட்டி

சுருள் சுருள் நெளிய நெளிய தலை முடியோடு
தலைவர் கலைஞர்
உரையாற்றுவது போல புகைப்படம்

மாவட்டப் போட்டிகள்
மண்டலப் போட்டிகள்
மாநிலப் போட்டிகள்
நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது
இளைஞர் அணி.

சிறப்பு என்னவென்றால்

தி.மு.க.
பேச்சாளராக
100 பேர்
தேர்ந்தெடுக்க போட்டி என்றே அறிவிப்பு செய்யப்பட்டது .

தி.மு.க. பேச்சாளராக இதோ வருகிறேன் என்று
இளம் பெண்கள்
இளம் தம்பிகள்
பெயரை தந்தார்கள்

யாரை நம்பி வருகிறோம் என்றார்கள்

இளைஞர் அணி செயலாளர்
சேனாபதி
உதயநிதி ஸ்டாலின் அவர்களை நம்பி வருகிறோம்
அவர் தலைமையை ஏற்று வருகிறோம் என்று பெயர்கள் கொடுத்தவர்கள்
17000 பேர் .

எங்கள்
உதயநிதி ஸ்டாலின் அவர்களை நம்பி
திராவிட வானத்தில் இருந்து பறந்து வந்து அவர் தோளில் அமர்ந்தது 17000 புறாக்கள்.

இளைஞர் அணி செயலாளராக
தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்
இருந்து நடத்திய
மாவட்ட மாநில போட்டிகளிலும் நடுவர் பணியாற்றிட
தலைவர் தளபதி அவர்களின் கருணையால்
அண்ணன்
அன்பகம் கலை அவர்கள்
எனக்கு வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிக்காட்டலின்படி
சகோதரர் செந்தில் அவர்கள்
எனக்கு பணியாற்றிட
பணித்தார்.

இளைஞர் அணி தலைமை அலுவலகம்
அன்பகம்
அண்ணா அரங்கில்
மாவட்ட அளவில்
17.08.2024 தேதி அன்று காலை
பேச்சுப் போட்டி நடைபெற்றது .

நாவுக்கரசர்
இலக்கிய பேரரசர்
நாஞ்சில் சம்பத் அவர்களோடு
நானும்
(ஈரோடு இறைவன்)
திருவண்ணாமலை கருணா அவர்கள்
( அண்ணன் கு.பிச்சாண்டி அவர்கள் தம்பி )
நடுவர்கள்

சேனாபதி
உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
பார்வையாளராக
கலந்து கொண்டு
பேச்சாளர்களுக்கு வாழ்த்துகள்
சொல்லி கிளம்பினார்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் அவர்கள்
இன்னொரு பக்கம் நடந்த நிகழ்ச்சியில்
நே.சிற்றரசு அவர்களும் கலந்து கொண்டார்கள்.

சில நொடிகளில்
இளைஞர் அணி செயலாளரின்
உதவியாளர் செந்தில் அலைபேசியில் அழைத்து
முதல் பரிசு
இரண்டாம் பரிசு
மூன்றாம் பரிசு
என்று மட்டும் கணக்கு வைத்து பேச்சாளர்களை தேர்வு செய்ய வேண்டாம்
அமைச்சர் அவர்கள்
எத்தனைப் பேர் நன்றாக பேசுகிறார்களோ அத்தனைப் பேரையும் வெற்றியாளராக தேர்வு செய்ய விடுங்கள்
மற்ற நடுவர்களுக்கும் சொல்லி
கலந்துப்பேசி முடிவெடுங்கள் என்றார் .

அங்குதான்
எங்கள் தலைவர்கள்
முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் போல
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் போல
எங்கள் இளைஞர் அணி செயலாளர் அவர்கள்
எடுத்த அருமையான முடிவு

தேர்வுகள் செய்யப்பட்ட பேச்சாளர்களுக்கு
மாவட்ட இளைஞர் அணி செயலாளர்
ராஜா அன்பழகன்
மாவட்ட செயலாளர்
மயிலை. த.வேலு
சிறப்பு செய்தார்கள்.

அடுத்த கட்டமாக
18.08.2024 தேதி அன்று
கள்ளக்குறிச்சி மாவட்டம் சென்றோம்

நெல்லிக்குப்பம்
புகழேந்தி
கோவி.லெனின்
நானும் ஒருங்கிணைந்து
நடுவர்கள் பணியில் இருந்தோம்
இன்னொரு பக்கம்
ஆலந்தூர் ஒப்பில்லா மணி
உமா
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.
இந்திரகுமார் தேரடி
ஆகியோர் இருந்தார்கள்.

அன்பின் அண்ணன்கள்
வசந்தம் க.கார்த்திகேயன்
தா.உதயசூரியன்
அவர்களும்
மாநில
இளைஞர் அணி துணைச் செயலாளர்
ப.அப்துல் மாலிக்
தாகப்பிள்ளை
மற்றும்
இளைஞர் அணி
நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பாக நிகழ்ச்சியை அமைத்து இருந்தார்கள்.

இதில்
நாம் தமிழர் கட்சியை சார்ந்த ஒரு தம்பி
கலந்து கொண்டு
தந்தை பெரியார் அவர்களைப் பற்றி
பேசினார்.
விடுதலை சிறுத்தைகள் கட்சியை சார்ந்த ஒரு தம்பி கலந்து கொண்டு பேசினார்.
எங்கள் இளைஞர் அணிக்கு பாகுபாடு கிடையாது முறையாக வந்தவர்களை மதிப்போடு நடத்தினோம்.

தலைவர் மு.க.ஸ்டாலின் கற்றுத்தந்த பண்புகள் அவை.

அடுத்த கட்ட பயணம்
தர்மபுரி 23.08.2024 அன்று
சென்றோம்
காணும் இடமெல்லாம்
இளைஞர் அணி
செயலாளர் பணிகள் குறித்து விளம்பரங்கள்
அரங்கம் நிறைந்து நின்றது .

ஒவ்வொரு ஊரிலும்
பேச்சுப் போட்டி
தொடங்கி விட்டால்
இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களின்
கனவுகளை
ஓவியமாக வரைந்தார்கள்.
கவிதையாக சொன்னார்கள்.
கல்லில் செதிக்கினார்கள்.
பேச்சாளர்கள்.

நடுவர்களாக
நெல்லிக்குப்பம்
புகழேந்தி
சூரியா கிருஷ்ணமூர்த்தி
நானும் இருந்தோம்.

முன்னாள் அமைச்சர்
பழனியப்பன்
தடங்கம் சுப்பிரமணியன்
குத்தாலம் அன்பழகன்
மாநில
இளைஞர் அணி துணைச் செயலாளர்
ஓசூர் சீனி அவர்கள்
இளைஞர் அணி நிர்வாகிகள்
வாழ்த்திப் பேசினார்கள்.

அடுத்த கட்ட பயணம்
கிருஷ்ணகிரி மாவட்டம்
24.08.2024 அன்று
சென்றோம்
நடுவர்கள்
மருத்துவர் நா.எழிலன்
சூரியா கிருஷ்ணமூர்த்தி
நானும் இருந்தோம்

இன்னொரு பக்கம்
தாயகம் கவி
மருத்துவர் யாழினி
சௌமியன்

அரசியல்
பண்பு நிறைந்தவர்
பசித்தவருக்கு
கொடுக்கும் மனம் நிறைந்தவர்.
அண்ணன்
மாவட்ட செயலாளர்
மதியழகன்
அவர்கள்
வழிகாட்டுதல் படி
சிறப்பாக நிகழ்ச்சியை அமைத்து இருக்கிறார்கள்

ஒவ்வொரு நொடியும்
அண்ணல் அம்பேத்கர்
தந்தை பெரியார்
பேறறிஞர் அண்ணா
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
தலைவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
ஆகியோர் அரசியல் பயணம்
கட்சியின் பயணம்
ஏன் சில மாநாட்டு தீர்மானங்கள் கூட
குறிப்பாக சொல்லி வியக்கும் வண்ணம் பேசினார்கள்.

மத வெறி கும்பலுக்கு எதிராக நிற்கும் துணிவில்
உதயநிதி ஸ்டாலின்
இன்னொரு
பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர் பல தலைவர்களை உருவாக்குவார் என்று
இளைஞர்கள்
இளம் பெண்கள்
பேசினார்கள் .

எங்கள்
கட்சிக்கு வெற்றி
கொள்கைக்கு வெற்றி
தத்துவங்களுக்கு வெற்றி
எங்கள் தலைவர்களுக்கு
வெற்றி

தயவுக் காட்டாமல்
பேசினார்கள்

திராவிட இயக்கத்தின்
வேர் என்பதே
பேசுவது
எழுதுவது அந்த வகையில்
இளைஞர் அணி
சிறப்பாக நடத்தியது
அடுத்த தலைமுறைக்கு தேவையான பேச்சாளர்கள்.

நிறைவு விழா நடைபெற்றது
அண்ணா அறிவாலயம்
பேறறிஞர் அண்ணா
முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்
சிலை முன்பு

17000 பேச்சாளர்களில்
நடுவர்கள் தேர்வு செய்த 182 பேச்சாளர்களோடு

தலைவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்
புகைப்படம்
வீடியோ எடுத்துக் கொண்டு
பலரோடு அங்கே உரையாடி விட்டு

கலைஞர் அரங்கம் சென்றார் அங்கே
மாநில அளவில் போட்டி என்பதால்
மூன்று பேர் தேர்வு
செய்து அறிவிப்பு செய்தார்கள்

நிறைவுரையாற்றிய
தலைவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்

இந்த பணியை செய்து முடித்த இளைஞர் அணி செயலாளரை
பாராட்டுகிறேன்
வாழ்த்துகிறேன்
காரணம் அவருக்கு கொடுக்கப்பட்ட அனைத்து பணிகளிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்குகிறார் என்று பேசினார் .

இளைஞர் அணி செயலாளர் பெரும் முயற்சியால் அமைந்த நிறைவு விழாவில்

பார்வையாளராக
தி.மு.க . கொள்கைப் பரப்புச் செயலாளர்
திருச்சி.என்.சிவா அவர்களை வைத்துக் கொண்டே

இளைஞர் அணி செயலாளர் சொன்னார்
இந்த 182 பேச்சாளர்களையும் இயக்கத்தின் நிர்வாகிகள்
அந்தந்த மாவட்டங்களில்
பயன்படுத்திட கேட்டுக் கொள்கிறேன் என்றார்

திராவிட இயக்கத்தின்
நான்காம் தலைமுறையை சார்ந்த பேச்சாளர்கள்
இதோ கிளம்பி விட்டார்கள்.

முரசொலி மாறன்கள்
துரை முருகன் கள்
இரகுமான்கன்கள்

பட்டுக்கோட்டை அழகிரிசாமி கள்
கோவை தென்றல்
இரா.இராமநாதன்கள்
அலைகடல்
இரா.வெற்றிகொண்டான்கள்
விடுதலை விருப்பிகள்
மா.நன்னன்கள்
திருச்சி என். செல்வேந்திரன்கள்

பொற்செல்வி இளமுருகுகள்
சற்குண பாண்டியன்கள்
வண்ணை தேவகி கள்

எங்கள் படை இங்கே
எதிரிகள் எங்கே



கவிஞர்
**ஈரோடு இறைவன்**
மாநில கழக
இலக்கிய அணி
இணைச் செயலாளர்



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணைய்நல்லூர் கிழக்கு ஒன்றியம் கொத்தனூர் ஊராட்சியில், தீ விபத்தில் மணி, ராசாம்பாள், நீலாவதி,விநாயகம் இவர்களின் வீடுகள் முற்றிலும் எரிந்து சேதமடைந்ததையொட்டி உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் ஆட்சி மன்ற குழு உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண உதவிகள் வழங்கினர். இதில் கிளை கழக செயலாளர் திருமால், ஒன்றிய கவுன்சிலர் சக்திவேல், ஸ்ரீதர், ஊராட்சி மன்ற தலைவர் வீராசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பெரிய செவலை சௌந்தர்ராஜன், மாவட்ட விவசாய அணி தலைவர் பத்மநாபன், பாதூர் வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டைச் சேர்ந்த

# 8 போலீஸ் அதிகாரிகளுக்கு விருது!

சென்னை, நவ.3-
தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த 8 பேர் உள்பட 463 பேருக்கு 2024-ஆம் ஆண்டிற்கான மத்திய உள்துறை அமைச்சகத்தின் திறன் பதக்க விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 முதல் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் காவல் துறை, மத்திய பாதுகாப்பு அமைப்புகள், மத்திய,மாநில தடய அறிவியல், புலனாய்வு பிரிவு ஆகியவற்றில் சிறப்பு நடவடிக்கை, புலனாய்வு, நுண்ணறிவு, தடய அறிவியல் ஆகிய நான்கு பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றும் அதிகாரிகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் பதங்களை வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்து விருது சிறந்த பணியை அங்கீகரிப்பதற்கும், உயர் தொழில்முறை தரங்களை மேம்படுத்துவதற்கும், சம்பந்தப்பட்ட அலுவலர், அதிகாரிகளின் மன உறுதியை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 31-ஆம் தேதி, அதாவது சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளன்று இந்த பதக்கம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 2024-ஆம் ஆண்டிற்கான இந்த விருது தமிழக காவல்துறையைச் சேர்ந்த 8 பேர் உள்பட பல்வேறு மாநிலங்களின் காவல்துறை, மத்திய ஆயுதக் காவல் படை, மத்திய காவல் அமைப்பு ஆகியவற்றின் 463 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக புலனாய்வுப் பிரிவில் மாவட்ட போலீஸ் எஸ்.பி.க்கள் வந்திதா பாண்டே, கே.மீனா, காவல் ஆய்வாளர்கள் எம்.அம்பிகா, என்.உதயகுமார், எஸ்.பாலகிருஷ்ணன், துணை காவல் ஆணையர்கள் சி.கார்த்திகேயன், சி. நல்லசிவம் மற்றும் தடய அறிவியல் பிரிவு துணை இயக்குநர் சுரேஷ் நந்தகோபால் என 8 பேர் மத்திய உள்துறை அமைச்சகத்தின் திறன் பதக்க விருதை பெறுகின்றனர்.